13 OCT 2020
வெண்ணந்தூர்-637
ந.க.//2895//2020

<u>சுருக்கம்</u>

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படை பணிநியமனம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – நாமக்கல் மாவட்டம் – மருத்துவ இயலாமையால் ஓய்வு பெற்ற அரசு ஊழியர் திரு.ஏ.எம்.கந்தசாமி என்பவரின் வாரிசுதாரராகிய மகன் திரு.க.கோபி ஊர்நல அலுவலர் நிலை–2 / இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ.3) துறை</u>

அரசாணை (4ப) எண்.50

நாள் :16.09.2020.
சார்வரி, ஆவணி, 31
திருவள்ளுவர் ஆண்டு– 2051

<u>படிக்கப்பட்டவை:</u>

1. அரசாணை (3ப) எண்.9, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ3) துறை, நாள் 06.02.2019.
2. நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்முறை எண்.நி4/25084/2014, நாள் 06.03.2019.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், கடிதம் எண்.35755/2019/டி1, நாள் 27.11.2019.
4. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யு–1) துறை, நாள் 23.01.2020.

*****

<u>ஆணை:</u>

நாமக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து வந்த திரு.ஏ.எம்.கந்தசாமி என்பவர் மருத்துவ இயலாமை காரணமாக (Medically invalidated) 24.1.2005–ல் பிற்பகல் பணி ஓய்வு பெற்ற நாளில் 55 வயது கடந்த நிலையில், அதன் பின்னர் 25.08.2005–ல் காலமானதால், அவரது மகன் திரு.க.கோபி என்பவர் தனக்குக் கருணை அடிப்படையில் பணி வழங்கக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு W.P.No.26082/2009-ன் மீதான 21.09.2016 நாளிட்ட தீர்ப்பு மற்றும் அத்தீர்ப்பின் மீது அரசு வழக்கறிஞரின் சட்டக் கருத்துரையில் அத்தீர்ப்பு மேல்முறையீடு செய்ய உகந்தது அல்ல எனத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் திரு.க.கோபி என்பவருக்குக் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்க அரசாணை (நிலை) எண்.168, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 19.10.2000 மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு–15 ஆகியவற்றைத் தனியர் பொருட்டு தளர்வு செய்து, தனியர் கருணை அடிப்படைப் பணி நியமனத்திற்கான கல்வி மற்றும் இதர அனைத்துத் தகுதிகளையும் நிறைவு செய்யும் பட்சத்தில், திரு.க.கோபி என்பவருக்குக் கருணை அடிப்படையில் நாமக்கல் மாவட்டத்தில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்க நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவரை அறிவுறுத்துமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தெளிவுரை வழங்கி ஆணையிடப்பட்டது.

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, திரு.க.கோபி என்பவருக்கு இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், நாமக்கல்

மாவட்டத்தில் ஊர்நல அலுவலர் நிலை–2 / இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 08.03.2019 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருகிறார். மருத்துவ இயலாமையால் ஓய்வு பெற்ற அரசு ஊழியர் தகுதிகாண் பருவம் முடித்த பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மகன் திரு.க.கோபி கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 06.11.2006 அன்று விண்ணப்பித்துள்ளார் என்றும், அவரது பிறந்த தேதி 07.05.1981 என்றும், அரசு ஊழியர் மருத்துவ இயலாமையால் ஓய்வு பெற்ற நாளில் தனியரின் வயது 24 என்றும், பணி நியமன நாளில் தனியரின் வயது 37 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்து, தனியரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 08.03.2019 முற்பகல் முதல் வரன்முறை செய்யக்கோரி மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

3. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018–ல் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணி வரன்முறை குறித்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

4. இந்நிலையில் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவை உரிய அசல் ஆவணங்களுடன் அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, ஊர்நல அலுவலர் நிலை –2 / இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.க.கோபி என்பவர் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், நாமக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் ஊர்நல அலுவலர் நிலை–2 / இளநிலை உதவியாளர் பதவியில் 08.03.2019 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் அலுவல் சாரா எண்.8601/ட்டி–1/2020, நாள் 19.08.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அலுவல் சாரா எண்.19915/ஜி1/2020, நாள் 10.09.2020–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹன்ஸ் ராஜ் வர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18/35.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை–15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.

<u>நகல்:</u>
திரு.க.கோபி, ஊர்நல அலுவலர் நிலை–2 / இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, நாமக்கல் மாவட்டம்.
( வழி: நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர்.)
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (ட்டி.1) துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஜி.1) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

ந.க.எண். நி4/25084/2014
நாள்:- 07.10.2020

மாவட்ட ஆட்சியரகம்
[வளர்ச்சி பிரிவு]
நாமக்கல்.

அரசாணை [4ப] எண். 50, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் [கி.3] துறை, நாள் 16.09.2020 உரிய நடவடிக்கை சார்வு செய்யும்பொருட்டு அனுப்பலாகிறது.

மாவட்ட ஆட்சியருக்காக,
நாமக்கல்.

7/10/2020

பெறுநர்

வட்டார வளர்ச்சி அலுவலர் [கி.ஊ],
வெண்ணந்தூர் வட்டாரம்.
[திரு. க. கோபி, ஊர்நல அலுவலர் நிலை-2,
வெண்ணந்தூர் வட்டாரம் அவர்களுக்கு
இரட்டை பிரதிகளில் சார்வு செய்து சார்வு நகல்
அனுப்பும் பொருட்டு]

நகல்:- "நி3" மற்றும் "நி4" இருப்புக் கோப்பிற்கு,

மே.கு.ந.க.எண். 2895/2020/அ1
நாள்: 13.10.2020

ஊராட்சி ஒன்றியம்
வெண்ணந்தூர்

//சார்வு செய்யப்படுகிறது//

(ஒப்பம்) ஆணையாளர்
ஊராட்சி ஒன்றியம்
வெண்ணந்தூர்

பெறுநர்

திரு. க. கோபி,
காசாளர்,
ஊராட்சி ஒன்றியம்
வெண்ணந்தூர்